செய்து, துறையின் விதிகளுக்குட்பட்டு இருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

235—

சாலையைச் சீரமைத்தல்

***47824—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதி, ராஜபாளையத்திலுள்ள அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் சாலையை சுற்றுலாத் துறையின் மூலமாகச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் நகரில் அமைந்துள்ள அருள்மிகு மாயூரநாதசுவாமி கோயிலுக்குச் செல்லும் சாலையைச் சீரமைப்பது தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறை செயற்பொறியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ள அறிக்கையில், “இத்திருக்கோயிலுக்குச் செல்லும் சாலையைச் சீரமைக்கும்போது, தேரோடும் வீதியின் குறுக்கே சாலை அமையும் வகையில் போட வேண்டியுள்ளதால், சாலை அமைப்பது இயலாத காரியம்” என்று தெரிவித்துள்ளபடியால், சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின்கீழ், அச்சாலையைச் சீரமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

[2015 செப்டம்பர் 4

முற்பகல் 10-50

திரு. க. கோபால்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலமது வியக்கின்ற கம்பீரக் காவியமாக; கருணையற்ற நரிகளின் சூழ்ச்சிகளைக் களம் கண்டு வென்றுவந்த கந்தனாக; காவியத்து ராமனாக; துச்சம் பகையே என துஷ்டர்களைத் துரத்தியடித்த துர்க்கையின் வடிவமாக, பொல்லாங்கு கும்பல்களின் புரட்டுகளைப் பொடி பொடியாக்கி, புகழ்மாலை சூடவந்த புறநானூற்று வீரமாக; (மேசையைத் தட்டும் ஒலி) நில்லாது சுழல்கின்ற பூமியைப்போல நிமிர்நடை உழைப்பாலே தங்கத் தமிழ் மண்ணை தரணி வியக்கின்ற புகழ் மண்ணாய் தலைநிமிர்த்திய தாயுருவ தெய்வமாக; (மேசையைத் தட்டும் ஒலி) அன்னைத் தமிழகத்தை கண்ணாகக் காத்திடவே அவதாரம் எடுத்து வந்த எங்களின் ஆண்டாளின் மறு வடிவமே! நான் நித்தம், நித்தம் வணங்குகின்ற சத்தியத் தாயின் பொற்பாதங்களில் என் வணக்க மலர்களைத் தூவுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயில் மிகப் பழமையானதும், புராதனமானதுமாகும். ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் இங்கு பிரம்மோற்சவ விழா தேரோட்டத்துடன் மிக விமரிசையாக நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயில் தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் அமைந்துள்ளதால், குற்றாலம் செல்லுகின்ற சுற்றுலாப் பயணிகளும், சபரிமலை செல்லுகின்ற சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக இத்திருக்கோயிலுக்கு வருகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர் ஓடுகின்ற அந்தச் சாலைகளைத் தவிர்த்து, மற்ற பகுதிகளிலுள்ள சாலைகளைத் தரமுயர்த்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர் ஓடும் வீதியைத் தவிர மற்ற இடங்களிலுள்ள சாலைகள் புதுப்பித்துத் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்தக் கேள்விக்கு, இந்து சமய அறநிலையத் துறையின் செயற்பொறியாளரிடம் திரும்பவும் ஓர் அறிக்கை பெற்று, மாவட்ட

2015 செப்டம்பர் 4]

ஆட்சித் தலைவரின் கருத்துரு பெற்று, அந்தச் சாலையைச் சீரமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

236—

மீன் பதனிடும் நிலையம்

***22228—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், கோனேரிப்பட்டியில் மீன் பதனிடும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், கோனேரிப்பட்டியில் மீன்கள் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வஞ்சனை செய்வோருக்கு சிம்மமாய், வாகைதனைப் படைப்போருக்கு சிகரமாய், வாழும்வகை அறிவோருக்கு வசந்தமாய், வசை உணர்வு கொண்டோருக்கு வெண்சுடராய் வீறு கொண்டெழுந்து, வெற்றிதனை அடைந்து, தங்கத் தமிழ்நாட்டை தரணிபோற்றும் நற்சான்றாய் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி நடத்தும் அம்மா, தொண்டாலே களிக்கும்*